செ.வெ.எண். 722 நாள்: 29.11.12

# பத்திரிக்கைச் செய்தி

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் செயல்பாடுகள் மக்கள் அறிந்திடும் வண்ணம் எழுபெரும் விழா, சென்னை, தியாகராய நகரில் உள்ள சர்.பி.டி. தியாகராய கலையரங்கில் 29.11.2012 அன்று சீர்மிகு முறையில் கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் திருமதி பா.வளர்மதி அவர்கள் பங்கேற்று, குழந்தைகள், கருவூற்ற தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளரிளம் பெண்களுக்கு ஊட்டச்சத்தின் அவசியம் குறித்தும், மாண்புமிகு **அம்மா** அவர்களின் அரசால் மக்களுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்து சிறப்புரை ஆற்றியதோடு, கலை நிகழ்ச்சியில் கலந்துக் கொண்டவர்களுக்கு பரிசுகளையும் வழங்கினார்கள்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட முதன்மைச் செயலர்/ சிறப்பு ஆணையர் திருமதி ஆர்.மீனாட்சி ராஜகோபால், இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று விழாவின் நோக்கம் குறித்து எடுத்துரைத்தார்.

மேலும் விழாவின் ஒரு பகுதியாக குறைந்த செலவில் அதிக ஊட்டச்சத்துக்கள் அளிக்கக்கூடிய உணவு தானியங்கள் அவற்றை உணவாக தயாரிக்கும் முறைகள் மற்றும் திட்ட செயல்பாடுகள் குறித்து கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. அங்கன்வாடி குழந்தைகள், வளரிளம் பெண்கள் ஆகியோரது கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. நிகழ்ச்சியில் அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பங்கேற்றனர்.

நிறைவாக சென்னை மாவட்ட திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் அவர்கள் நன்றியுரை நவில விழா இனிதே நிறைவுற்றது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9